கடவுளுடன் நட்புகொள்வது என்பது பிள்ளைகள் பெற்றோரிடம் பேசுவதுபோல எளிமையான இறைவேண்டல்.

– திருத்தந்தை பிரான்சிஸ்




இன்றைய இறைவார்த்தை:

விப: 24:3-8

திபா: 116: 12-13, 15-18

எபி 9: 11-15

மாற்: 14: 12-16, 22-26

INTERNAL CIRCULATION ONLY
BLL 22/2024

"இதை வாங்கி உண்ணுங்கள் / இதிலிருந்து பருகுங்கள், இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார்.

இதை திருஅவை பலகாலங்களுக்குப் பின்னும் இதைச் செய்யும் என்று ஆண்டவர் அறிந்துள்ளார். நற்கருணையின் மீது நாம் கொண்டிருக்கும் அசைக்கமுடியாத நம்பிக்கை தொடர்ந்து நம்மை வழிநடத்தும், பாதுகாத்து இட்டுச் செல்லும்.

பல்வேறு காலங்களிலும் உலகின் பல்வேறு பகுதிகளிலும் தூய நற்கருணை பவனிப்பட்டு பல நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. ஆலயத்தில் திருப்பலிக்கு முன் நற்கருணைப் பேழையில் வீற்றிருக்கும் இயேசுவை ஆராதிக்க வரும் மக்கள் பலரும் அவர்களின் வாழ்வை மாற்றக்கூடிய பல்வேறு அதிசயமான நிகழ்வுகளுக்கு சான்று அளித்துள்ளனர். உடைந்த உள்ளத்தையும், பலவீனத்தையும் வெற்றிடத்தையும் அவரின் அருளால் நிரப்பி, இயேசு நம் வாழ்வில் பலவகைகளில் செயலாற்றுகின்றார். நம் வாழ்வில் ஊடுருவி நம் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் தருகிறார் என்பதே அவர் தரும் வாக்குறுதி. இவ்வாறாக நற்கருணையில் இயேசு எவ்வாறு நம் வாழ்க்கையை மாற்றி சிறப்பாக வாழ உதவினார் என்பதற்கு சொந்த கதைகள் அதிகம் நம்மிடம் உண்டு.

பல காலமாக, ஏழைகள், மற்றும் ஒதுக்கப்பட்டவர்களை கவனித்துக்கொள்வது, சமத்துவம் மற்றும் மனித உரிமைகளுக்காக முன் நிற்பது, போதிய சுகாதாரம், கல்வி வழங்குதல், சுற்றுச்சூழலைக் கவனித்துப் பாதுகாத்தல் மற்றும் பிறஉடைமைகள் உட்பட உலகின் முக்கிய பிரச்சனைகளுக்கு திருஅவை எப்போது மறுமொழி கொடுத்துக்கொண்டே இருக்கிறது. இவற்றில் எதையும் நம்முடைய சொந்தமுயற்சியால் சாதிக்கமுடியாது. நம்முடன், நம்மில், நம் வழியாக, நமக்காகவும் செயலாற்றுவது இயேசுவே. இதுவே இயேசுவின் வல்லமை.

ஒவ்வொரு முறை திருப்பலியை நாம் கொண்டாடும்போதும், இயேசு மீண்டும் மீண்டும் உயிரோடு வருகிறார். இந்த விருந்தில் நம் முன்னிலையில் அவர் மகிழ்ச்சியடைகிறார். மேலும் அவரைப் போல கிறிஸ்துவாக நாம் மாற விரும்புகிறோம். இந்த விருந்தில் அவர் முன்னிலையில் நாம் இருக்கும்போது, அவரின் நிலைவாழ்வை நாம் உரிமையாக்கிக்கொள்கிறோம் என்று புனித பவுல் கூறுகிறார். யாராவது அவரை உண்டால் அவர் என்றுமே வாழ்வார் என்று இயேசுவும் உறுதியளித்துள்ளார். இதைத் தான் நாம் இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா நாளில் கொண்டாடுகிறோம். இயேசுவும் நாமும் ஒன்றே - அன்பிலும் புனிதத்திலும் நாம் ஒன்றே என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.✣

Published by: Archdiocesan Pastoral Institute (API) | Email: api@archkl.org



NEW WAY OF BEING CHURCH
newbec

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செயல்படுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

திரு அவையாக நம் குழந்தைகளை வளர்விடுங்கள்



# நற்கருணை

## உயிருள்ளது மற்றும் ஆற்றல்வாய்ந்தது

கத்தோலிக்கர்களுக்கு நற்கருணை நிச்சயமாக ஒரு விருந்து மற்றும் கடவுளின் பரிசு. இதுவே அவர் நம்முடன் செய்த உடன்படிக்கை. அவர் நம்மோடு இருப்பதாக வாக்குறுதி தந்துள்ளார். அதனால் தான் திருப்பலி நம்முடைய வாழ்வின் ஊற்றும் உச்சமுமாக மாறுகிறது. இயேசு குருத்துவத்தை கடைசி இராவுணவின்போது ஏற்படுத்தியபோது, தம் சீடர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டார்.